

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் காட்டாத்தூர் சுவாதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரையாற்றினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, செப் 12 –

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் அவர்கள் மறைவை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

**தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**வணிகர் பெருமக்களின் நலனுக்காக உழைத்த அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையைச் சேர்ந்த அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மதுரை மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் காணொலி காட்சி வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் உதவி இணைப்புகள் வழங்கியதை தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் தமிழ்ப் பல்கலைக்கழக வளாக கூட்டரங்கில் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடனுதவி இணைப்புக்கான காசோலையினை வழங்கினார்கள். மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் கா.அண்ணாதுரை, டி.கே.ஜி.நீலமேகம், மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷாபுண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புதுக்கோட்டை க. வீரைய்யா**

**செப்டம்பர் 12 (1993)**



**புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு! தி.மு.க. பவள விழா!

# விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கழகத்தினர் இல்லங்களில் கழகக் கொடியேற்றுவோம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிக்கை!



திண்டிவனம், செப். 12 -

திராவிட முன்னேற்ற கழகத்தின் பவள விழா முப்பெரும் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்ட முழுவதும் உள்ள கழகத்தினரின் இல்லங்களில் கழக இரு வண்ணக் கொடியினை ஏற்ற வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்கிறார் என்றும், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்களது அறிக்கை வருமாறு :

திராவிட இயக்க முன்னோடிகள் நடேசனார், டாக்டர் டி எம். நாயர் சர், பிட்டி, தியாகராயர் போன்ற தலைவர்களின் இலட்சியங்களையும் தொடர்ந்து வந்த தந்தை பெரியாரின் சுயமரியாதை சிந்தனைகளையும் தமிழ் மண்ணில் பட்டி தொட்டி எங்கும் பரப்பி கழகத்தைப் தோற்றுவித்து தமிழ் இனம் தமிழ் மொழி என்கிற திராவிட கொள்கைகளை உணர்வுகளை ஊட்டி வளர்த்து தமிழர்களின் பாதுகாப்பு இயக்கமாம் இந்த மாபெரும் இயக்கத்தை ஆட்சி அரியனையில் அமர வைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் .

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று தாய் திருநாட்டிற்கு தமிழ்நாடு என பெயர் மாற்றம் இரு மொழி கொள்கை சுயமரியாதை திருமண சட்டம் செல்லும் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி காட்டினார் இன்றைக்கு தமிழ் இனம் தலைநிமிர்திருக்கிற தென்றால் அடித்தளமிட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் .

காஞ்சித்தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழகம் என்ற பேரியக்கம் அண்ணாவின் கொள்கை தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தம்பிகளால் தலையாய தம்பியான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நமது உயிரினும் மேலான அன்பு தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற வேளையில் நம் நெஞ்சங்களில் நிறைந்து இருக்கின்ற கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆணையிட்டுள்ளார் .

இந்தியாவிற்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்து சட்டங்களை உருவாக்கி இன்று இந்தியாவையே வழிநடத்தக் கூடிய வகையில் திமுக கழகம் தனக்கென தனித்துவமான இடத்தை பெற்று திகழ்கிறது என்றால் அந்த பெருமை எல்லாம் நம் உயிராகவும் உதிரமாகவும் திகழ்கின்ற திமுக கழகத்திற்கே உரியது . இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாக திகழ்கிறது தி.மு.க. என்னும் பேரியக்கம் இந்த வரலாற்று பெருமையில்கழக உடன்பிறப்புகள் பங்கு அளப்பரியது.

தி.மு.க. 75 ஆண்டுகளைக் கடந்து பவள விழாவை நிறைவு செய்த பேரியக்கம் வெற்றி தோல்விகளை கடந்து தனது லட்சியப் பாதையில் உறுதிக் குலையாமல் பயணித்து வரும் தி.மு.க.வுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர் கொண்டு முதுகு வளையாமல் தரையில் தவழாமல் நெஞ்சை நிமித்தி நின்று நான் தி.மு.க. காரன் நான் கலைஞரின் உடன்பிறப்பு தளபதியின் அன்பு தொண்டன் என்று கம்பீரமாக சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன் பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்ற கழகம் தனது 75வது ஆண்டினை பவள விழாவாக கொண்டாடி மகிழ்ந்து வருகிறது கழகத்தின் பவள விழா ஆண்டு கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று கழக கொடிக் கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இரு வண்ணக் கொடியினை கம்பீரமாக ஏற்ற வேண்டும் .

கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடு நடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழகக் கொடியை ஏற்றி பட்டொளி வீசச் செய்திட வேண்டும் என்று நமது நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும் நமது தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்கவும், இன்னும் 50 ஆண்டுகள் இந்த இயக்கத்தை வழி நடத்துவதற்காக தமிழ்நாட்டு மக்களின் செல்லப்பிள்ளை கலைஞரின் பேரப்பிள்ளை கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன்

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி கிளைக் கழகங்களிலும் நகர பேரூரில் உள்ள அனைத்து வார்டுகளிலும், உள்ள கொடிக்கம்பங்களில் வர்ணம் தீட்டி புதுப்பித்து வருகிற செப்டம்பர் 15 பேரறிஞர்அண்ணா பிறந்தநாள் அன்று காலையில் கழக முன்னோடிகளை வைத்து கழக இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டுமென்றும் செப்டம்பர் 17ஆம் தேதி சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து கழகத்தினர்கள் பெரும் திரளாக பங்கேற்க வேண்டும், மேலும் தி.மு.க. கழக பவள விழாவை கழகத்தினர்கள் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும்

இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்று சிறப்பிக்கிறார்.

இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் அர.சக்கரபாணி தொகுதியில் 234/77 ஆய்வுத் திட்டத்தின் 184 ஆவது ஆய்வை மேற்கொண்டார். நேருஜி அரசு மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு, நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கழிவறை கட்டடங்களையும், வகுப்பறைகளையும் பார்வையிட்டார். தொழிற்பயிற்சி பிரிவு மாணவர்களையும், போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களையும் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார். முன்னதாக வேடச்சந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் தொகுதியில் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியிலும் ஆய்வு மேற்கொண்டார்.



நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாகையில் யாழிசை மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றியச் செயலாளர் க.இராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றிய அவைத் தலைவர் சீனிவாசன், துணைச் செயலாளர் திருநாவுகரசு மற்றும் பலர் உள்ளனர்.

